www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

12 207

**வகுப்பு : 12**

தேர்வு எண் | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 70

## உயிரியல்

பகுதி – I (உயிரி–தாவரவியல்) பிரிவு – I

குறிப்பு (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 8X1=8

(ii) கொடுக்கப்பட்ட மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. மயோசோட்டிஸின் மகரந்தத் துகளின் அளவு
அ) 10 மைக்ரோமீட்டர் ஆ) 20 மைக்ரோமீட்டர் இ) 200 மைக்ரோமீட்டர் ஈ) 100 மைக்ரோமீட்டர்
2. மெண்டலின் ஆய்வில் பட்டாணித் தாவரத்தின் ஏழு பண்புகளை கட்டுப்படுத்தும் மரபணுக்கள் எத்தனை குரோமோசோம்களில் காணப்படுகின்றன?
அ) ஏழு ஆ) ஆறு இ) நான்கு ஈ) ஐந்து
3. மரபுக்குறியின் AGC யானது AGA வாக மாற்றமடையும் நிகழ்வு
அ) தவறுதலாக பொருள்படும் சடுதி மாற்றம் ஆ) பொருளுணர்த்தாத சடுதி மாற்றம்
இ) கட்ட நகர்வு சடுதி மாற்றம் ஈ) நீக்குதல் சடுதி மாற்றம்
4. வைரஸ் அற்ற தாவரங்கள் -------- இருந்து உருவாக்கப் படுகின்றன.
அ) உறுப்பு வளர்ப்பு ஆ) ஆக்குத்திசு வளர்ப்பு
இ) புரோட்டோபிளாச வளர்ப்பு ஈ) செல் வளர்ப்பு
5. கீழ்கண்ட எந்த தாவரத்தில் இதயத்தை பாதிக்கும் கிளைக்கோசைடுகளை உற்பத்தி செய்கிறது?
அ) கலோட்ராபிஸ் ஆ) அக்கேஷியா இ) நெப்பந்தஸ் ஈ) யூட்ரிகுலேரியா
6. ஓசோனின் தடிமனை அளவிடும் அலகு
அ) ஜல் ஆ) கிலோ இ) டாப்சன் ஈ) வாட்
7. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத இணை எது?
அ) கோதுமை – ஹிம்கிரி
ஆ) மில் பிரிட் – சாஹிவால்
இ) நெல் – ரத்னா
ஈ) பூசாகோமல் – பிராசிகா
8. தேர்ந்தெடுத்தல் எந்த முறையுடன் தொடர்புடையது?
அ) செல்லியல் ஆ) தாவர பாசியியல் இ) பயிர்பெருக்கம் ஈ) மரபியல்

### பிரிவு–II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4x2=8

9. மிர்மிகோபில்லி என்பது என்ன?
10. கூட்டு பரிணாமம் என்றால் என்ன?
11. நியுக்ளியோடைடு வெளிப்புறம் (ம) உட்புறம் துண்டிக்க பயன்படும் நொதிகள் யாவை?
12. முழு ஆக்குத் திறன் – வரையறு.
13. SLF என்பது என்ன?
14. பல்கூட்டு அல்லீல்கள் என்றால் என்ன?

### பிரிவு–III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 19 விற்கு கட்டாயமாக விடையளிக்கவும். 3x3=9

15. புவி வாழிடம் மற்றும் செயல் வாழிடம் வேறுபடுத்துக.
16. விதைப்பந்து என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை.
17. மரபணு வரைபடம் என்றால் என்ன?
18. Bt பருத்தியின் நன்மைகளை எழுதுக.
19. பன்ம பாதுகாப்பில் கோயில் காடுகள் எவ்வாறு உதவிபுரிகின்றன?

### பிரிவு–IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2x5=10

20. அ) சூலின் அமைப்பை தகுந்த படத்துடன் விவரி.
(அல்லது)
ஆ) ஓங்கு பண்பு மறைத்தலை எடுத்துக் காட்டுடன் விவரி.
21. அ) தாவரத் திசு வளர்ப்பின் பயன்பாடுகளை எழுதுக.
(அல்லது)
ஆ) நறுமணப் பொருட்களின் அரசன், அரசி யாவை? அவற்றின் பயன்களை எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பகுதி – II (உயிரி–விலங்கியல்) (மதிப்பெண்கள்–35)

### பிரிவு – I

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 8X1=8

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. கீழ்கண்டவற்றில் எது கருசூழ் படலம் அல்ல?
அ) ஆம்னியான் ஆ) கோரியான் இ) சோனா பெலுசிடா ஈ) ஆலண்டாயிஸ்

2. கீழ்கண்டவற்றில் தாமிரம் வெளியிடும் உள் கருப்பைச் சாதனம் எது?
அ) லிப்பஸ் வளையம் ஆ) LNG -20 இ) Multiload 375 ஈ) ஆ மற்றும் இ

3. பட்டாவ் சின்ட்ரோம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) 18 டிரைசோமி ஆ) 21 டிரைசோமி இ) 13 டிரைசோமி ஈ) எதுவுமில்லை

4. ஊர்வன இனத்தின் பொற்காலம்
அ) மசோசோயிக் பெருங்காலம் ஆ) சீனோசோயிக் பெருங்காலம்
இ) பேலியோசோயிக் பெருங்காலம் ஈ) புரோட்டிரோசோயிக் பெருங்காலம்

5. நோயூக்கிகள் மற்றும் அவைகள் உண்டாகும் நோய்களை பொருத்தி கீழே உள்ள சரியான பொருத்து குறியீட்டை தேர்ந்தெடு.

A. லீஷ்மேனியா டோனோவானி — i. அமீபியாசிஸ்
B. உச்சரீரியா பான்கிராஃப்டி — ii. காலா அசார்
C. டிரிப்பனசோமா கேம்பியன்ஸ் — iii. தூக்க வியாதி
D. எண்டமீபா ஹிஸ்டாலிடிகா — iv. யானைக்கால் நோய்

அ) A-ii, B-iv, C-iii, D-i ஆ) A-ii, B-iv, C-i, D-iii
இ) A-iii, B-i, C-ii, D-iv ஈ) A-i, B-iv, C-iii, D-ii

6. சைக்ளோஸ்போரின் A என்ற நோய்த்தடுப்பாற்றல் ஒடுக்கு மருந்து எதிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது?
அ) அஸ்பார்ஜில்லஸ் நைஜர் ஆ) மொனாஸ்கஸ் பர்பூரியஸ்
இ) பெனிசிலியம் நொடேட்டம் ஈ) டிரைக்கோடெர்மா பாலிஸ்போரம்

7. கீழ்கண்ட தொழில்நுட்பங்களில் எது ஒரு நோயை அதன் ஆரம்பகால சிகிச்சைக்கு கண்டறிவதன் நோக்கத்தை குறிப்பிடவில்லை?
அ) PCR ஆ) ELISA
இ) மறுசேர்க்கை மரபணு தொழில்நுட்பம் ஈ) சீரம் மற்றும் சிறுநீர் பகுப்பாய்வு

8. கூற்று : வெப்பமண்டலப் பகுதிகளில் நிலவும் சுற்றுச்சூழல் தன்மைகள் உயிரினங்களின் சிற்றினமாக்கல் மற்றும் பல்வகைத்தன்மைக்குச் சாதகமாக உள்ளன.
காரணம் : பருங்காலம், தட்பவெப்பநிலை, ஈரப்பதம், ஒளிக்காலம் ஆகியவை நிலையாகவும் உகந்ததாகவும் உள்ளன.
அ) காரணம் மற்றும் கூற்று இரண்டும் சரி, காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
ஆ) காரணம் மற்றும் கூற்று இரண்டும் சரி, காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) காரணம் மற்றும் கூற்று இரண்டும் தவறு

### பிரிவு –II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4x2=8

9. பிளாஸ்மோடோமி என்றால் என்ன?
10. கருக்கொலை மற்றும் சிசுக்கொலை வேறுபடுத்துக.
11. தகவமைப்பு பரவல் என்றால் என்ன?
12. ஹாப்டென்கள் என்றால் என்ன?
13. இணை மரபற்றுப் போதல் என்றால் என்ன?
14. உயிரிய ஆக்ஸிஜன் தேவை (BOD) என்றால் என்ன?

### பிரிவு –III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 19 க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 3x3=9

15. சீம்பால் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் யாது?
16. லையோனைசேஷன் என்றால் என்ன?
17. கடத்து RNA இணைப்பு மூலக்கூறு என ஏன் அழைக்கப்படுகிறது?
18. பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம் வேறுபடுத்துக.
19. சூழல் உள்பாதுகாப்பு மற்றும் சூழல் வெளிபாதுகாப்பு இரண்டையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

### பிரிவு –IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2x5=10

20. அ) மாதவிடாய் சுழற்சியின் பல்வேறு நிலைகளை விளக்குக.
(அல்லது)
ஆ) மரபணு குறியீடுகளின் சிறப்பு பண்புகள் யாவை?

21. அ) முதல்நிலை தடைக்காப்பு துலங்கல்கள் மற்றும் இரண்டாம் நிலை தடைக்காப்பு துலங்கல்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாது? (அல்லது)
ஆ) உயிரிய பல்வகைத்தன்மை இழப்பிற்கான பல்வேறு காரணங்களை பட்டியலிடுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com